வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 28.01.2026 புதன்கிழமை | இதழ் : 28 | பக்கங்கள் : 08




# பட்ஜெட்டை எதிர்க்காத தமிழ் தரப்பு கிவுல் ஓயாவை எதிர்த்துக் கூக்குரல்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 28

2026 வரவு-செலவுத்திட்டத்தை எதிர்க்காத தமிழ்த் தரப்பினர், இன்று கிபுல் ஓயா திட்டத்திற்கு எதிராக கூக்குரலிடுகின்றனர் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

2026 வரவு - செலவுத்திட்டத்தையும், சிங்கள குடியேற்றத்தையும், நல்லிணக்கம் என்ற போர்வையில் எதிர்க்காத தமிழ்த் தரப்பினர், இன்று கிவுல் ஓயா திட்டத்திற்கு கூக்குரலிடுகின்றனர். ஆனாலும், அவர்கள் இன்று எதிர்ப்பு வெளியிடுவதை வரவேற்கிறோம்.

மகாவலி எல் வலயத்துக்குள்ளேயே கிவுல் ஓயா திட்டமும் வருகிறது.

இந்த கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் அரசியல் இலாபம் எடுத்துகொள்வதற்காகவே தமிழரசுக் கட்சி இப்போது எதிர்ப்பு தெரிவிக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் வரக்கூடும் என்பதற்காகவே அவர்கள் விழுத்தடித்து நடந்துகொள்கிறார்கள். ஆகவே இந்த கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னின்று மேற்கொள்ள சிவில் சமூகம் முன்வரவேண்டும். அதனையே நாங்களும் விரும்புகிறோம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எங்கள் ஆதரவும் அதற்கு இருக்கும்-என்றார்.(அ)



## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை சந்தித்துப் பேசினார் கனேடிய தூதுவர்


யாழ்ப்பாணம், ஜன. 28

கனடாத் தூதுவருக்கும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை 4.00 மணியளவில் யாழில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், எதிர்கால அரசியல் நகர்வுகள் உள்ளிட்ட முக்கியமான பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடல் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக இடம்பெற்றது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்கள்

07



## வெளிநாடுகளில் உள்ள குற்றவாளிகள் சி.ஐ.டியினரிடம் சரணடைவதற்கு தயார்!

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தகவல்

கொழும்பு, ஜன. 28

இலங்கையில் திட்டமிட்ட குற்றக்குழுக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அதிரடி நடவடிக்கைகளால், சர்வதேச ரீதியில் தலைமறைவாக உள்ள குற்றவாளிகள் கடும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

இதன் விளைவாக, வெளிநாடுகளில் இருக்கும் பல முக்கிய குற்றவாளிகள் தாம் சரணடையத் தயாராக இருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில்

07

## கொழும்பு மைய அரசியல்-தாயக மைய அரசியல் இடையேயான பிரச்னையே சிறிதரன் விவகாரம்!

### ஆய்வாளர் யோதிலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 28

சிறிதரன் விவகாரம் கொழும்பு மைய அரசியலை நடத்துவதா அல்லது தாயாக மைய அரசியலை நடத்துவதா என்ற பிரச்னையே என அரசியல் ஆய்வாளரும் சட்டதரணியும் சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி. அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை இரா சம்மந்தன் எடுத்திருந்தார். அது சம்மந்தனின் முழுப் பொறுப்பு. அதனை எடுக்கவேண்டிய சூழலை

07

## மத்திய மலைநாட்டை பாதுகாக்க புதிய அதிகார சபை நிறுவப்படும்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.28

மத்திய மலைநாட்டைப் பாதுகாத்து, முன்னேற்ற புதிய சட்டம் மற்றும் அதிகார சபை நிறுவப்படும் என்றும், கிராமப்புற வறுமையை ஒழிக்கவும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத் தவும் அரசாங்கம் தற்போது அதிக பணிகளைச் செய்து வருவதாக ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

டித்வா சூறாவளியால்

07

## யாழ்.பல்கலைக்கழகத்துக்கு கனேடியத் தூதுவர் விஜயம்!



யாழ்ப்பாணம், ஜன. 28

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய தூதுவர் இசபெல் மார்ட்டீன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

07

## யாழ்ப்பாணத்தில் காற்று மாசு: அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜன. 28

யாழ்ப்பாணம் பகுதியில் நிலவும் காற்று மாசடைவைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண மாநகர சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் காற்று மாசடைவதைக் குறைப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிக்குமாறு கோரி, அந்த பகுதியில் வசிக்கும் வைத்தியர் உமாசுகி நடராஜா தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை

07

## அரச மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

கொழும்பு, ஜன.28

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடங்கிய தொழிற்சங்க நடவடிக்கை நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

சங்க உறுப்பினர்கள் ஐந்து குறிப்பிட்ட சேவைகளிலிருந்து விலகியுள்ள போதிலும், அவசர மற்றும் அத்தியாவசிய மருத்துவ பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள வைத்திய சாலை களில், குறிப்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், நாளாந்த மருத்துவ

07

## கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் காலவரையறையற்ற வேலைநுறுத்தம்

கொழும்பு, ஜன. 28

கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் இன்று காலை 8 மணி முதல் நாடு தழுவிய ரீதியில் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சானக இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

## குளவி கொட்டுக்கு இலக்காகிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பலி!

### முல்லைத்தீவில் நேற்று துயரச் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 28

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் குளவித் தாக்குதலுக்குள்ளான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனி ஜோர்ச் (வயது-53) என்பவர் ஆவார்.

மாங்குளத்தில் பாடசாலை மாணவர்கள்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கு வடக்கில் போதுமான தங்குமிட வசதிகள்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



முல்லைத்தீவு, ஜன. 28

வடக்கு மாகாணத்துக்கு ஏனைய மாகாணங்களிலிருந்தே சுகாதாரத்துறைக்கான உத்தியோகத்தர்கள் வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகளை நாம் முறையாகப் பூர்த்தி செய்து கொடுக்கும்போதே, அவர்களிடமிருந்து எமது மக்களுக்கான முழுமையான சேவையை பெற்றுக்கொடுக்க முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம், மாங்குளம் ஆதார மருத்துவமனையில் புனரமைக்கப்பட்ட விடுதிகளைப் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விடுதிகளைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர் முடிவடைந்த பின்னர் நான் முல்லைத்தீவு மாவட்ட செயலராகப் பணியாற்றிய காலத்தில், மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு இலங்கை இராணுவம் பெரும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. அதேபோன்று இப்போதும், வடக்கு மாகாண சபையின் நிதியில் மேற்கொள்ளப்பட்ட இப்புனரமைப்புப் பணிகளுக்கு இராணுவத்தினர் தமது மனிதவலுவை வழங்கியுள்ளனர்.

இராணுவப் பொறியியல் பிரிவினர் இப்பணிகளை உரிய காலத்தில் முடித்துள்ளதுடன், அவர்களின் பங்களிப்பு காரணமாக சுமார் 6 மில்லியன் ரூபா வரையிலான அரச நிதி சேமிக்கப்பட்டுள்ளது. இதற்காக அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்-என்றார். வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், மாங்குளம் ஆதார மருத்துவமனையின் மருத்துவர் விடுதி, தாதியர் விடுதி, துணை மருத்துவ ஆளணியினர் விடுதி, சாரதி விடுதி மற்றும் நோயாளர் காவு வண்டித் தரிப்பிடம் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் முதற்கட்டமாக முழுமையாகப் புனரமைக்கப்பட்ட தாதியர் விடுதி, நோயாளர் காவு வண்டித் தரிப்பிடம் மற்றும் சாரதி விடுதி என்பன நேற்று திறந்து வைக்கப்பட்டன. இதில் தாதியர் விடுதியானது 8 அறைகள், சமையலறை மற்றும் உணவு அருந்தும் அறை உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரதீப் குலதுங்க, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சமன் பத்திரன, முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர், மருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் காயன், மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# யாழ். கோட்டை புனரமைப்பு பணி; நேரில் பார்வையிட்டார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாண கோட்டைக்குள் காணப்பட்ட அற்புத மாதா ஆலயம் சிதிலமடைந்துள்ள நிலையில், அதனை அதன் வரலாற்று அடையாளத்துடன் மீளமைக்க தொல்லியல் திணைக்களத்தால் இதுவரை எந்தச் சரியான முயற்சியும் எடுக்கப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், யாழ்ப்பாண கோட்டை பகுதிக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை தமிழரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் எம்.ஏ சுமந்திரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன் , கோட்டைப் பகுதியில் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடினார்

அதேவேளை கோட்டைப் பகுதியை சுற்றியுள்ள தொல்லியல் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளை சுற்றி தொல்லியல் திணைக்களத்தினால் எல்லை கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

எல்லைக் கற்கள் நாட்டுவது குறித்து எந்த தரப்புடனும் கலந்துரையாடாது அவற்றை நாட்டியுள்ளமை தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வரும் நிலையில், அவற்றினையும் சுமந்திரன் பார்வையிட்டார். (அ)



# உள்ளூராட்சி பெண் உறுப்பினர்களை சந்தித்தனர் சர்வதேச இராஜதந்திரிகள்

யாழ்ப்பாணம், ஜன. 28

பல்வேறு சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகளின் இராஜதந்திரிகள், யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றும் பெண் அரசியல் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இலங்கைக்கான கனடா தூதுவர், மாலைதீவு தூதுவர் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் துணை வதிவிடப் பிரதிநிதி ஆகியோரே சந்திப்பை நடத்தியிருந்தனர்.

இதன்போது திறந்த மற்றும் சிந்தனைக்கான இடத்தை உருவாக்கல், பெண்களின் தலைமை பற்றிய உரையாடல், பொது அலுவலகங்களில் பெண்கள் நுழைவதற்கும் மற்றும் நிலைநிறுத்துவதற்கும் பெண்கள் தொடர்ந்து எதிர் கொள்ளும் தடைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பெண்களின் அரசியல் பங்கேற்பை முன்னேற்றுவதற்கு ஒத்துழைப்புக் கூட்டாண்மை மூலம் ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவமும் இதன்போது உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். போதனாவுக்குள் நள்ளிரவு நுழைந்து கைபேசியை திருடிய இளைஞர் மறியலில்!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் நள்ளிரவுவேளை அத்துமீறி நுழைந்து கையடக்கத் தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் கைதான இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கடந்த நள்ளிரவு வேளை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கண்காணிப்பையும் மீறி அத்துமீறி நுழைந்த இளைஞர் ஒருவர் சுத்திகரிப்புப் பணியாளர்களின் மேற்பார்வையாளரின் கையடக்கத் தொலைபேசியை களவாடியுள்ளார்.

அது தொடர்பில் அறிந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விரைந்து செயற்பட்டு கையடக்க தொலைபேசியை திருடிய இளைஞரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (அ)

# சுண்டிக்குளத்தில் கடல் அரிப்பின் தாக்கம் அதிகரிப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 28

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட ஜெ 435 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சுண்டிக்குளம் பகுதியில் கடல் அரிப்பின் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

டித்வா புயல் காரணமாக சுண்டிக்குளம் கிராமம் கடுமையாக பாதிக்கப்பட்டது. கடற்றொழிலாளர்களின் பெறுமதி வாய்ந்த தொழில் உபகரணங்களும், இருப்பிடங்களும், கரையோர தென்னங் காணிகளும் அழிவடைந்துள்ளன.

கடல் 150 மீற்றர் தூரத்துக்கும் அதிகமாக உட்புகுந்த வண்ணம் உள்ளது. இவ்விடயம் குறித்து உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)


# ரயிலுடன் மோதுண்டது மோ.சைக்கிள் மயிரிழையில் உயிர் தப்பினார் பெண்!

வவுனியா, ஜன. 28

வவுனியா தாண்டிக்குளத்தில் ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா தாண்டிக்குளம் ரயில் கடவையில் ரயில் சமிக்ஞையை மீறி பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். இதன்போது யாழில்இருந்து வவுனியா நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

விபத்தில் கிடாச்சூரி சாஸ்திரிகூழாங்குளத்தை சேர்ந்த அல்பிரட் ஜெயராஜ் திலகவதி (வயது - 52) என்பவரே காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இராணுவ வாகனம்-கார் யாழில் மோதி விபத்து!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனமும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

யாழ்ப்பாண நகரப் பகுதியை அண்மித்த மடத்தடிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படாத நிலையில், விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.01.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், தை 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## 13 இல் இந்தியா உறுதி

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா அதன் நிலைப்பாட்டை தளர்த்தவில்லை - முன்னைய நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா குறிப்பிட்டிருக்கின்றார். யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு வெளிவரும் ஆங்கில இதழ் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டாவது நடக்குமா என்னும் கேள்விகள் நிலவுகின்ற நிலையில் அவரது கருத்து வெளியாகியிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டாலும் கூட, மாகாண சபை முறைமையை முழுமையாக இல்லாதொழித்தல் என்பது இலகுவான ஒரு இலக்காக இருக்காது என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது அதேவேளை சமஷ்டி பெயர்ப் பலகை முக்கியமல்ல உள்ளடக்கம்தான் முக்கியம் - ஒற்றையாட்சி நீக்கப்பட்ட அரசியல் தீர்வு - இப்படியான சொற்களுடன் மல்லுக் கட்டிக்கொண்டிருக்கும் தமிழ் கட்சிகள் தாங்கள் கூறுவதை அடையும் வழியில்லை என்பதும் இதன் மூலம் தெளிவாகின்றது. ஏனெனில் அவ்வாறானதொரு தீர்வை இலங்கைத் தீவுக்குள் அடைவதற்கான புற அழுத்தங்கள் ஒருபோதும் இருக்கப் போவதில்லை.

மாகாண சபையுடன் பயணிப்பதைத் தவிர வேறு தெரிவுகள் எதுவும் தமிழருக்கு முன்னால் இல்லை என்பதுதான் இலங்கையின் அரசியல் யதார்த்தம். அமெரிக்காவின் புதிய அணுகுமுறைகள் உலகில் மீண்டும் பிராந்திய வல்லரசுகளின் தலைமைக்கான கதவை திறந்திருக்கும் நிலையில் இந்தியாவின் தலையீடு இல்லாமல் ஈழத் தமிழர் தீர்வு ஒன்றை அடையலாம் என்பது பகல் கனவாகவே இருக்கும்.

இல்லாவிட்டால் இந்தியா என்பதை தள்ளிவிட்டு ஏதாவது ஒரு உடன்பாட்டை கொழும்புடன் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இதனைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதினாறு ஆண்டுகளில் அரசியல் ரீதியில் எந்தவொரு விடயமும் நிகழவில்லை - மாறாக இந்தக் காலத்தில் தங்களுக்குள் யார் கொள்கைவாதி என்னும் பிரயோசனமற்ற பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததுதான் மிச்சம்.

ஏனெனில் இந்தக் காலத்தில் இடம்பெற்ற நீதிக்கான உரையாடல்கள் பெருமளவிற்கு விழலுக்கிறைத்த நீரான கதையாகிவிட்டது - உலக அரசியல் நிலைமைகள் மாறுகின்ற போது கூடவே நாடுகளின் ஆர்வங்களும் ஈடுபாடுகளும் மாறிவிடுகின்றன. இதில் அரசியல்வாதிகள் தங்களின் தன்முனைப்பிற்குள் சிக்குண்டு கிடக்கின்றனர் என்றால் தங்களை சிவில் சமூகமாக அழைத்துக் கொள்பவர்கள், கருத்துருவாக்கிகளாக அழைத்துக் கொள்பவர்களும் கூட விழலுக்கிறைக்கும் முயற்சிகளுக்கு கற்பனையில் பாத்திரம் எடுத்துக் கொடுக்க முற்படுவதுதான் சினத்திற்குரியது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் யார் வெற்றி பெறுவார் என்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் அதிகம் கரிசனை கொள்ள வேண்டியதில்லை - மாறாக முதலில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுவதற்கான அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்துவது தொடர்பில்தான் சிந்திக்க வேண்டும். மாகாண சபை நிர்வாகம் இருக்கும் நிலையில்தான் அதனை உச்சபட்சமாக கையாளுவது தொடர்பில் சிந்திக்க முடியும். இந்தியா இந்த விடயத்தில் தளம்பலற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக கூறுவது அடிப்படையில் ஈழத் தமிழருக்கு சாதகமான ஒரேயொரு விடயமாகும். ஒருவேளை இந்தியா அதன் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தினால் அதன் பின்னர் மாகாண சபை என்னும் விடயம் கூட இருக்காது.

# ஓய்வூதியத்தை இரத்து செய்தால் அரசியல்வாதிகள் மோசடி புரிவர்!

### உதய கம்மன்பில சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 28

1970ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் பாராளுமன்றத்துக்கு முன்பாக இருந்து ஐந்து ரூபா கடன் பெற்றார்கள். இதன் பின்னரே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்தால் அரசியல்வாதிகள் தமது எதிர்காலத்தை கருத்திற்கொண்டு ஊழல் மோசடியில் ஈடுபடுவார்கள் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தவறான எடுத்துக்காட்டாகவே பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் பிரபல்யமான தீர்மானத்தை எடுத்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் தீர்மானம் ஏன் எடுக்கப்பட்டது? ஏனைய நாடுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப்படுகிறதா? ஏன் என்பதை ஆராயாமல் ஊழலை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஓய்வூதிய கொடுப்பனவை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1947 முதல் 1970 வரை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் 1970ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார்கள். அதன் பின்னர் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக இருந்து பாராளுமன்றத்துக்கு வருபவர்களிடம் ஐந்து ரூபா கடன் கேட்பார்கள். இதனை கண்டு தமது எதிர்கால நிலைமையின் அச்சுறுத்தல் மற்றும் ஊழல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு 1977ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்தால் சேவையில் உள்ளபோது அரசியல்வாதிகள் ஊழல் மோசடி செய்து எதிர்காலத்துக்கு தேவையான நிதியை சேகரித்துக் கொள்வார்கள். ஆகவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவை இரத்துச் செய்யும் தவறான தீர்மானத்தை எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்-என்றார்.

(அ)

# வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளை அழைத்து வரும் நடவடிக்கைகள் தீவிரம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜன. 28

நீதிமன்றத்தைப் புறக்கணித்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வருதல் மற்றும் அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு.வூட்லர் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிமன்றத்தைப் புறக்கணித்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வருவதற்கான விசேட நடவடிக்கை பொலிஸ் மா அதிபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் 2026 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் கடந்த 2024ஆம் ஆண்டில் 10 சந்தேகநபர்களையும், 2025 ஆம் ஆண்டில் 11 சந்தேகநபர்களையும் வெளிநாடுகளில் இருந்து எம்மால் நாட்டுக்கு அழைத்து வர முடிந்தது.

அதற்கமைய இந்த வருடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து மற்றுமொரு சந்தேகநபர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார். எந்த நாட்டுக்குச் சென்று தலைமறைவாகியிருப்பினும், நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்துத் தப்பிச் செல்பவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த சகல நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். வியாபாரத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வரும். பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்சினைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சிறப்பான நாள்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சினன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**தனுசு**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கி யிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

# வவுனியா, செட்டிக்குளத்தில் விபத்து: நால்வர் மருத்துவமனையில் அனுமதி





*வவுனியா, ஜன. 28*

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து மாதவாச்சி நோக்கிப் பயணித்த கூலர் ரக வாகனமும் மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ஜீப் ரக வாகனமும் செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் வைத்து மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தானது வீதியில் நின்ற கட்டாக்காலி மாடுகளால் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-10)

# தொண்டமனாறு- வல்லை- துன்னாலை வீதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது



*யாழ்ப்பாணம், ஜன. 28*

தொண்டமனாறு- வல்லை- துன்னாலை வீதி புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டும் விழா வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் நிஷாந்தன் ஜனனி தலைமையில் தொண்டமனாறு சந்தியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 3. 9 கிலோ மீற்றர் வீதி 252 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு முதல் கல்லை நாட்டிவைத்தார். வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ரமணன், சாம், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்களான அன்பு, திருமதி நிஷாந்தன் ஜனனி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(எ-08)

# கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பில் எமக்கு சந்தேகங்கள்: அதனால் எதிர்க்கிறோம்

## சத்தியலிங்கம் எம். பி. தெரிவிப்பு

*வவுனியா, ஜன. 28*

கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பில் எமக்கு இருக்கும் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, நாங்கள் அதனை எதிர்க்கின்றோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பில் வவுனியா பொது அமைப்புகள் ஒன்று கூடி கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் முன்னெடுத்தன.

வவுனியா தமிழ் அரசுக்கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சத்தியலிங்கம் எம். பி. மேலும் கூறுகையில்,

“கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பில் வவுனியா மற்றும் முல்லைத் மாவட்ட மக்களுக்கு பல சந்தேகங்கள் உள்ளன. இந்த விடயத்தில் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படவேண்டும் என்று நாங்கள் மாவட்ட அபிவிருத்திக்கூட்டங்களிலும், அமைச்சர்களிடமும் கேட்டிருந்தோம். இந்தத் திட்டம் வவுனியாவில் வாழ்கின்ற மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு பாரிய ஒரு பின்விளைவை ஏற்படுத்தக் கூடிய திட்டமாக நாங்கள் சந்தேகப்படுகின்றோம்.

கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பில் எமக்கு இருக்கும் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, நாங்கள் அதனை எதிர்க்கின்றோம். இது தொடர்பில் அனைத்து தமிழ்க்கட்சிகளோடும் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தோம். அனைத்து கட்சிகளும் இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளனர்.

வவுனியாவில் உள்ள பொது அமைப்புகளின் ஆலோசனைகளை பெற்றுள்ளோம். அவர்களும் கிவுல் ஓயாத் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று உறுதியாக கூறியுள்ளனர்.”- என்றார்.

(எ-10)

# கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜன. 28*

இணுவில் பொது நூலக கலை கலாசாரத்துறையின் ஆதரவில் இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்திய கவிதாயினி வித்தியாபாரதியின் “அன்புள்ள டைரிக்கு” கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் பேராசிரியர் கந்தையா சிறீ கணேசன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து ஆரம்பமான இந்த நிகழ்வில், தலைமையுரை, வெளி யீட்டு உரை, நூல் மதிப்பீட்டு உரை என்பன நடைபெற்றன.

முதல் பிரதிகளை நாராயண பிள்ளை கருணாகரன் தம்பதிகளும் ஆறுமுகம் செல்வராசா தம்பதிகளும் பெற்றுக்கொண்டனர்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்ற பீதியை ஏற்படுத்தும் எதிரணி!

**பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டு**



கொழும்பு, ஜன. 28

நாட்டில் வேண்டுமென்றே அமைதியின்மையை உருவாக்கி, புதிய கல்விச் மறுசீரமைப்பை சீர்குலைக்க எதிர்க்கட்சியும் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவும் முயற்சிப்பதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர், எதிர்க் கட்சியின் இத்தகைய தன்னிச் சையான செயற்பாடுகளே புதிய கல்வி மறுசீரமைப்புகளின் சில அம்சங்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு முக்கிய காரணம் என்று குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினர் பரப்பிவரும் தவறான கூற்றுகளால் பெற்றோர்கள் மத்தியில் தேவையற்ற பீதி ஏற்பட்டுள்ளது.

இது மறுசீரமைப்பு செயல்முறையின் மீது பொதுமக்களுக்கு இருந்த நம்பிக்கையை சீர்குலைத்துள்ளது.

மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தும் எந்தவொரு நிலையிலும் சில குறைபாடுகள் இருப்பது இயல்பானது, ஆனால் அத்தகைய ஒவ்வொரு விடயத்தையும் மறுசீரமைப்பின் தோல்வியாக எதிர்க்கட்சி சித்திரிக்கிறது என அவர் தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்பு ஒத்திவைக்கப்படமாட்டாது என்பதைத் தெளிவுபடுத்திய அமைச்சர், முன்மொழியப்பட்ட ஐந்து அளவுகோல்களில் நான்கரை அளவுகோல்கள் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படும் என குறிப்பிட்டார்.

தரம் 6 ஆங்கில பாடநெறி தொடர்பான ஒரு தொழில் நுட்பப் பிரச்னை காரணமாகவே மிகக் குறைந்தளவிலான தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சிக்கு எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக எந்தவித நற்பெயரும் இல்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர், அவர்களின் சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்றும் வலியுறுத்தினார். (அ)

# சபாநாயகருக்கு எதிராக பிரேரணை சமர்ப்பிப்பதற்கு மீண்டும் யோசனை?

கொழும்பு, ஜன. 28

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடன் கொண்டுவருமாறு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்குத் தான் யோசனை தெரிவிப்பதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடனும், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தான் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் சுயாதீனமாகச் செயற்படத் தவறியுள்ளதோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு இடமளிக்காமல் ஜனநாயக விரோத முறையில் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இதற்கு முன்னரும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம், பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற ஒன்றியங்களுக்கு முறைப்பாடு அளித்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் தனது கடமைகளைச் சரியாகச் செய்வார் என்ற நம்பிக்கையில் அப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணை தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போது பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகத்தின் பணியை எவ்வித விசாரணையுமின்றித் தன்னிச்சையாக இடைநிறுத்தியுள்ளமையானது பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதான பாரிய தாக்குதலாகும் எனவும், இதனால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாகக் கொண்டு வருவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

# இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 17.25 பில்லியன் டொலராக உயர்வு

கொழும்பு, ஜன. 28

இலங்கையின் 2025 ஆம் ஆண்டுக்கான மொத்த ஏற்றுமதி வருவாய் 17.25 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இது முந்தைய ஆண்டைவிட 5.6 வீத வளர்ச்சியாகும்.

இதில் சரக்கு ஏற்றுமதி மூலம் 13.57 பில்லியன் டொலர்களும், சேவை ஏற்றுமதி மூலம் 3.67 பில்லியன் டொலர்களும் வருவாயாகக் கிடைத்துள்ளன. நாட்டின் பொருளாதார மீட்சியில் ஏற்றுமதித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக இந்த தரவுகள் காட்டுகின்றன.

பொருளாதார ரீதியிலான சவால்களுக்கு மத்தியிலும், ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் நாட்டின் வர்த்தக சமநிலைக்கு வலுச்சேர்ப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# டித்வா' உயிரிழப்பு 649! 173 பேரை காணவில்லை

கொழும்பு, ஜன. 28

"டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 649 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 173 பேர் காணாமல் போயுள்ளனர். காணாமற்போனவர்களில் கண்டியில் 69 பேரும், கேகாலையில் 38 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 32 பேரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகபட்சமாக கண்டி மாவட்டத்தில் 243 மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதற்கு மேலதிகமாக, பதுளை மாவட்டத்தில் 89 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 81 பேரும் உயிரிழந்துள்ளனர்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 85 நிவாரண மையங்களில் 6,680 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் மற்றும் காணாமற்போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ)

# மருந்துகள் தட்டுப்பாடு; சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 28

புற்றுநோய் சிகிச்சைக்கான 40 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், சந்தையில் பதிவு செய்யப்படாத தரமற்ற மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறி, இது குறித்து விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் சுயாதீன தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் வைத்தியர் சமல் சஞ்சீவ ஆகியோர் இந்த முறைப்பாட்டைச் சமர்ப்பித்தனர்.

புற்றுநோய் வைத்தியசாலையில் மாத்திரம் சுமார் 40 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், நோயாளிகள் அதிக விலை கொடுத்து வெளிச் சந்தையில் மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதாக வைத்தியர் சமல் சஞ்சீவ சுட்டிக்காட்டினார்.

சந்தையில் கிடைக்கும் பல மருந்துகள் பதிவு செய்யப்படாதவை எனக் குறிப்பிட்ட அவர், "அந்த மருந்து போத்தல்களுக்குள் இருப்பது சாதாரண நீரா, உப்பு நீரா அல்லது பக்டீரியாக்களா என்பது எங்களுக்குத் தெரியாது" எனத் தனது அச்சத்தை வெளிப்படுத்தினார்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் தரம் மற்றும் அவற்றின் பதிவுகளை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் பொலிஸ் உட்பட ஐவர் கைது!

## பதுளையில் சம்பவம்

பதுளை, ஜன. 28

பதுளை, வெலிமடை, அம்ப கஸ்தொவ பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்டவர் பதுளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

சந்தேக நபரான பெண் பொலிஸ் கான்ஸ்டபிளிடமிருந்து 04 கிராம் 2 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 26 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

பொலிஸாரின் விசாரணையில், சந்தேக நபரான பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுடன் மேலும் நான்கு பெண்களும் ஓர் ஆணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பகஸ்தொவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# "விசாரணை ஆணைக்குழுவை அரசாங்கம் நியமிக்க வேண்டும்"

கொழும்பு, ஜன. 28

கொரோனா பெருந்தொற்று காலப்பகுதியில் ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் உடல்களை தகனம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார்.

உடல்களை இவ்வாறு வலுக்கட்டாயமாக தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்பட்டவர்களின் உறவினர்களின் உளநிலை தொடர்பில் விசாரணை செய்வதற்கும்,

இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல்களுக்கு முரணாக செயல்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும் விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்று தனிநபர் பிரேரணையை முன்வைத்துள்ளார். (எ)

தானம் வழங்கும் நிகழ்வில்

# கண்டி மாநகர சபையின் பிரதி முதல்வர் மீது தாக்குதல்

கண்டி, ஜன. 28

கண்டி- சுதுஹும்பொல பிரதேசத்தில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கண்டி மாநகர சபையின் பிரதி முதல்வர் ருவன் குமார தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார் என்று கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சுதுஹும்பொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற தானம் வழங்கும் நிகழ்வில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கண்டி மாநகர சபை உறுப்பினர் இது தொடர்பில் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# மலையக மக்களை ஏமாற்றியவர்களை மக்கள் இன்று ஓரம்கட்டி வைத்துள்ளனர்

## கலைச்செல்வி எம். பி. சாடல்

ஹற்றன், ஜன. 28

பரம்பரை பரம்பரையாக மலையக மக்களை ஏமாற்றி வந்தவர்களை மக்கள் இன்று ஓரம்கட்டி வைத்துள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார்.

நுவரெலியா- ஹற்றனில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "மலையகத்தில் கடந்தகால அரசியல் வாதிகளுக்கு மக்கள் முன்னுரிமை வழங்குவதில்லை. இவர்களின் அரசியல் பயணம் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

கடந்த சில வாரங்களில் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை தெரிவித்து வந்தனர். அதேபோல் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பிலும் தவறான கருத்துக்களை கொண்டு செல்கின்றனர்."- என்றார். (எ)

# நுவரெலியாவில் கையெழுத்து சேகரித்து வாகன உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்



நுவரெலியா, ஜன. 28

நுவரெலியாவில் தனியார் வாகன போக்குவரத்து செயலிக்கு எதிராக சாரதி சங்கத்தினர் மற்றும் வாகன உரிமையாளர்கள் கையெழுத்துக்களை சேகரித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நுவரெலியா மாநகர சபை மைதானத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு நுவரெலியா - பதுளை பிரதான வீதியூடாக வாகனங்களில் கறுப்புக் கொடி பறக்கவிட்டு வாகனத்தில் பேரணியாக பிரதான நகரை சுற்றி வந்து அஞ்சல் நிலையத்துக்கு முன்பாக ஒன்றிணைந்து தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இறுதியில் தங்களுடைய கையெழுத்துக்களுடனான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்கும் நுவரெலியா மாநகர சபை முதல்வருக்கும் நுவரெலியா தலைமை பொலிஸ் பரிசோதகருக்கும் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சாரதிகள் கருத்து தெரிவிக்கையில்,

தனியார் போக்குவரத்து செயலி ஊடாக ஓட்டோக்கள் உள்ளிட்ட வாகன சவாரிகளில் ஈடுபடுவோர் நுவரெலியாவுக்கு வெளி மாவட்டங்களில் இருந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை அழைத்து வந்து இறக்கிவிட்ட பின்னர் மீண்டும் நுவரெலியாவிலிருந்து செல்லும் போதும் அந்த செயலி மூலம் பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்கின்றனர்.

நுவரெலியாவில் ஆரம்பத்தில் இந்த செயலி பாவனை குறைவாக காணப்பட்டது. ஆனால், இப்போது அனைவரும் நிரந்தர பயன்பாட்டில் உள்ளனர். குறிப்பாக சுற்றுலாப்பயணிகளும் பொது மக்களும் அதனைப் பயன்படுத்த தொடங்கிவிட்டனர். இதன் காரணமாக நீண்டகாலமாக ஓட்டோ மற்றும் ஏனைய வாகனங்களை வாழ்வாதாரமாக கொண்டிருக்கும் நாங்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குகின்றோம்.

மேலும், நுவரெலியா சுற்றுலாவுக்கு ஒரு பிரதான தளமாகும். இங்கே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணமுள்ளனர். இவர்களிடம் குறித்த செயலி மூலம் இரகசியமான முறையில் பணம் பரிமாற்றம் செய்து ஏற்றிச் செல்கின்றனர்.

அத்துடன் கூடிய தூரத்துக்கு குறைந்தளவு பணத்தை வாங்கிக் கொண்டு பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். இது போன்று செய்தால் காலை முதல் இரவு வரை இந்த தொழிலை நம்பியிருப்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என தெரிவித்தனர். (எ)

# பொலிஸார் - பொதுமக்கள் பாதுகாப்பு குழுக் கூட்டம்

காரைதீவு, ஜன. 28

அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச பொலிஸார், பொதுமக்கள் பாதுகாப்பு குழுக் கூட்டம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். பி. ஜி. ஜயரத்ன தலைமையில் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் நுவன் பீ நந்த நாராயண இதில் கலந்து கொண்டார்.

17 கிராமிய பொது மக்கள் பாதுகாப்பு குழு தலைவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், கோவில் தர்மகர்த்தா மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஜன. 28

கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைப் பிராந்தியத்தின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மணித்தியாலத்துக்கு சுமார் 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் சீரான வானிலை நிலவக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

நீர்கொழும்பு தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக

பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாக காணப்படும்.

நாட்டைச் சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பிபில - பதுளை வீதியில் விபத்து: 20 பேர் மருத்துவமனையில் அனுமதி

பதுளை, ஜன. 28

பிபில - பதுளை வீதியில் யல்கும்புர பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 20 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கவனக்குறைவாக செலுத்தப்பட்ட பேருந்து ஒன்று முன்னால் பயணித்த லொறியுடன் மோதி பின்னர் மற்றுமொரு பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் 20 பேர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக பிபில ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளில்...

நேற்று முன் தினம் கலந்துகொண்டு உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, இந்த முக்கிய தகவலை வெளியிட்டார்.

அரசாங்கம் சர்வதேச அளவில் "சிவப்பு அறிவித்தல்" வழிமுறைகளை தீவிரப்படுத்தியுள்ளதால், இனி தப்பிச் செல்ல முடியாது என்பதை உணர்ந்தே குற்றவாளிகள் இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அரசியல் செல்வாக்கின் மூலம் இந்த குற்றப் பின்னணிகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அத்தகைய பாதுகாப்புகள் நீக்கப்பட்டுள்ளதால், பொலிஸார் தடையின்றி மேல்மட்டத் தலைவர்களைக் குறிவைத்துச் செயல்படுகின்றனர்.

நாடு தழுவிய ரீதியில் தேசிய கொள்கைக் குழு முதல் கிராமிய மட்டத்திலான பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்கள் வரை அனைத்தும் முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவை இனி நேரடி அமுலாக்க நடவடிக்கைகளில் ஈடுபடும்.

போதைப்பொருள் விநியோகச் சங்கிலியின் அடிமட்டத்தை மட்டும் தாக்காமல், வெளிநாடுகளில் இருந்து அதனை இயக்கும் "உச்சக்கட்டத் தலைவர்களை" இலக்கு வைத்து சர்வதேச ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். (அ)

## கொழும்பு...

உருவாக்கியிருந்தது. அன்றைக்கு முதலாவது எதிரி மகிந்த ராஜபக்ஷ, அவரை பலவீனப்படுத்தவே தமிழ் தேசிய கூட்டமைப்பு அந்த முடிவை எடுத்திருந்தது.

அன்று கஜேந்திரகுமாரும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்தமையால் அந்த முடிவுக்கு இணங்கிப் போகவேண்டியிருந்திருக்கலாம். அப்போது அந்த முடிவெடுத்தது தவறு என்பது எனது அபிப்பிராயம். அந்த நேரம் பொது வேட்ப்பாளர் என்ற சிந்தனை அதிகரிக்கவில்லை. உண்மையில் அந்த இரண்டு பேரையும் ஆதரிக்க முடியாது.

இரண்டு பேரையும் விடுத்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கலாம். அந்த இடத்தில் அவர்கள் விட்டது தவறு. ஆனால் அன்றைக்கு முதலாவது எதிரி மகிந்த ராஜபக்ஷ, அன்று சரத் பொன்சேகாவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காமல் விட்டிருந்தாலும் மக்கள் ஆதரிக்கின்ற சூழல்தான் அப்போது இருந்தது. ஆனால் அன்று இருந்த சூழலுக்கும் இன்று இருக்கின்ற சூழலுக்கும் வேறுபாடு உண்டு.

பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்னாள் ராணுவ தளபதியாக இருந்த ஒருவரை கணக்காளர் நாயகமாக நியமிப்பதற்கு ஆதரவளித்ததாக ஒரு குற்றசாட்டு முன்வைக்கப்படுகிறது. அது தொடர்பில் அவர் பொதுவெளியில் எதனையும் கூறவில்லை.

அவர் ஆதரவு கொடுத்திருந்தால் உண்மையில் அது தவறதுதான். அதற்காக அவரை அரசியலமைப்பு பேரவையிலிருந்து விலக சொல்லி கேட்பது பொருத்தமில்லை. ஆனால் அதனை கேட்பவர் யார் எனில் அவர் சுமந்திரன். சுமந்திரன் ஏற்கனவே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக செயற்பட்ட ஒருவர்.

சுமந்திரன் ஒரு பச்சை இனவாதியாக இருக்கின்றார். திருகோணமலை புத்தர் விகாரைக்கு ஆதரவாக இருந்த சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக இருந்தவர். ஆகவே சுமந்திரனுக்கு அதனைச் சொல்லும் நியாயப்பாடு இருக்கின்றது என்பதை கூறிவிட முடியாது. இந்த விடயத்தில் சிறிதரன் இராணுவ தளபதிக்கு வாக்களித்திருந்தால் அது தொடர்பான காரணத்தை மக்களுக்கு சொல்ல வேண்டும்.

உண்மையாக இருந்தால் மன்னிப்பு கேட்கவேண்டும். இனிமேல் அவ்வாறு நடக்காமல் இருப்பதற்குரிய உத்தரவாதத்தையும் வழங்கவேண்டும். அதுதான் பொருத்தமாக இருக்கும்.

அதற்காக அவரை அரசியல் அமைப்பு பேரவையில் இருந்து வெளியேறவேண்டும் என்று கூறவேண்டிய தேவை இல்லை என்றுதான் நான் நினைக்கின்றேன். சிறிதரனுக்கு எதிரான மிக மோசமான கருத்துக்களை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்திருந்தார். இதற்கெல்லாம் பின்புலமாக நின்று செய்யற்ப்பட்டவர் சுமந்திரன்தான்.

சுமந்திரன் கொழும்பு மைய அரசியலை நகர்த்துகின்ற ஒருவர். கொழும்பு மைய அரசியலை நகர்த்த வேண்டும் என்றால் சிறிதரனை இந்த அரசியலில் இருந்து அகற்ற வேண்டும். சிறிதரனை அகற்றாமல் கொழும்பு மைய்ய அரசியலை அவரால் செய்ய முடியாது. அதற்காக சிறிதரனை அகற்றுவதற்கு சுமந்திரன் கடுமையாக நிற்பது போலத்தான் தெரிகிறது.

இன்றைக்கு அவர்களுடைய அரசியல் குழு கூட்டத்தில் அரசியல் குழு என்று அங்கு பெரிதாக ஒன்றும் இல்லை. அரசியல் குழு என்பது சுமந்திரனுடைய எடுபிடிகளை கொண்ட குழுதான். அந்த அரசியல் குழு கூட்டத்தில் பாராளுமன்றக் குழு தலைவர் பதவியிலிருந்தும் விலகவேண்டும் என்று தீர்மானம் எடுத்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் சுமந்திரனுக்கு என்ன உரிமை இருக்கிறது என்ற கேள்வி வருகிறது-என்றார். (அ)

## மத்திய...

சேதமடைந்த மதத் தலங் களை புனரமைப்பதற் கான "கட்டியெழுப்பு வோம் ஒன்றிணைந்த உறுதியுடன்" தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முற்பகல் கம்பளை, தொரகல, பீகொக் ஹில் குடியிருப்பின் போதிருக்காராம விஹாரையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனர்த்தத்தைத் தொடர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத, கலாசார மற்றும் தொல்பொருள் தலங்கள் சேதமடைந்தன.

அந்த இடங்களில் தேவையான புனரமைப்புப் பணிகளை உடனடியாகத் தொடங்கி அவற்றை முன்னர் இருந்த நிலைக்கு மீளக் கட்டியெழுப்புவதற்கான அனைத்து புனரமைப்புப் பணிகளையும், குறித்த இடங்களின் தொல்லியல் பெறுமதியைப் பாதுகாக்கும் வகையில் மகா சங்கத்தினர் உட்பட ஏனைய மதத் தலைவர்களின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மத்திய மலைநாட்டைப் பாதுகாத்து, முன்னேற்ற புதிய சட்டம் மற்றும் அதிகார சபை நிறுவப்படும்.

கிராமப்புற வறுமையை ஒழிக்கவும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசாங்கம் தற்போது அதிக பணிகளைச் செய்து வருகிறது.

முதலாம் தரத்திற்கான புதிய கல்வி மறுசீரமைப்புகள் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

மேலும், வரலாற்றில் முதல்முறையாக, இந்த பெப்ரவரி மாதத்தில் தோட்டத் தொழிலாளர்கள் 1,750 ரூபா நாளாந்த சம்பளம் பெறுவார்கள்.

இவை அனைத்திற்கும் மத்தியில் சிறந்த மனித உறவுகளைக் கொண்ட ஒரு சமூகம் தேவை. அரச அதிகாரிக்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகின்ற மக்களுக்கும் இடையிலான உறவு, மகா சங்கத்தினருக்கும் நிர்வாக சபைக்கும் இடையிலான உறவு, பாடசாலை ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு உட்பட இந்த அனைத்து உறவுகளும் இன்று வீழ்ச்சிக்கு உள்ளாகிவிட்டன.

நாட்டை சமூக ரீதியாகக் கட்டியெழுப்ப, இந்த உறவுகள் அனைத்தும் மீண்டும் சிறந்த முறையில் பேணப்பட வேண்டும். மகா சங்கத்தினர் உட்பட மதத் தலைவர்களுக்கு இந்த விடயத்தில் பெரும் பங்கு உண்டு.-என்றார். (அ)

## யாழ்...

கடந்த இரு நாள்களாக வடக்குக்குக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள கனேடிய தூதுவர் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து, பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர், நூலகர் மற்றும் அரசறிவியல், பொருளியல் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புகளின் போது, அரசியல் பொருளாதார நிலைமைகள் உட்பட சமகால விடயங்கள் பற்றியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கனேடியத் தூதரக அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (அ)

## யாழ்ப்பாணத்தில்...

பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரொஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே தமது வாதங்களை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் திறந்தவெளியில் கழிவுகள் எரிக்கப்படுவதால் பாரிய அளவில் காற்று மாசடைவு ஏற்படுகிறது. காற்று வழியாகத் தென்னிந்தியாவிலிருந்து வரும் கழிவுத் துகள்களாலும் இந்த பகுதியில் காற்று மாசடைவு அதிகரித்துள்ளது எனவும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இந்த மாசடைவு காரணமாகப் பொதுமக்கள் மத்தியில் நோய்த்தாக்கங்கள் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், இது தொடர்பான ஆதார அறிக்கைகளையும் சமர்ப்பித்தார்.

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் ஆயம், யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியன இணைந்து, காற்று மாசடைவைக் குறைக்க எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

மேலும், யாழ்ப்பாண மாநகர சபை ஏன் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

இவ்வாறான பொதுப் பிரச்னைகளை அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடுவதன் மூலம் தீர்க்க முடியும் எனவும், இவற்றை நீதிமன்றத்திற்கு வழக்காகக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை எனவும் நீதியரசர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த பிரச்னையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு, பொலிஸார் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினர் திறந்தவெளியில் கழிவுகளை எரிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் அவசியமும் இதன்போது மறைமுகமாக வலியுறுத்தப்பட்டது. (அ)

## அரச...

சேவைகள் வழக்கம்போல நடைபெற்று வருகின்றன என்று தகவல்கள் கூறுகின்றன.

சங்கத்தின் நிர்வாகக்குழு எடுத்துள்ள தீர்மானங்களின் படி, வெளியிடங்களில் வாங்கவேண்டிய மருந்துகளை பரிந்துரைக்காதிருத்தல், வெளியக ஆய்வக பரிசோதனைகளை பரிந்துரைக்காதிருத்தல், மருத்துவர்களின் அனுமதி இல்லாமல் புதிய வைத்தியசாலை பிரிவுகளை திறக்காதிருத்தல், சுகாதார முகாம்கள் மற்றும் கிளினிக்குகளில் பங்கேற்காதிருத்தல் ஆகியவை அமுல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், நோயாளிகளை பரிசோதிக்கும்போது துணை பணியாளர் இல்லாத நிலையில் கடமைகளிலிருந்து விலகுவதும் இதில் அடங்கும். இந்த தொழிற்சங்க நடவடிக்கை கடந்த ஜனவரி 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.(அ)

## கதிரியக்க...

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் நிலவும் பிரச்னைகளுக்கு முறையான தீர்வு வழங்கத் தவறியமையே இந்தப் போராட்டத்திற்குக் காரணமாகும். மாளிகாவத்தை மருத்துவமனையின் கதிரியக்கப் பிரிவுப் பணிப்பாளர், தகுதியற்ற நபர்களைப் பயன்படுத்தி கதிரியக்கப் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தார். இது குறித்து 2024 முதல் 2026 வரை பலமுறை சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உயர் அதிகாரிகள் தவறிழைக்கும் போது அமைச்சு மௌனம் காத்து வருகிறது. ஆனால், சாதாரண ஊழியர்கள் மீது பாரபட்சமான முறையில் விசாரணைகள் நடத்தப்படுகிறது. இந்த வேலைநிறுத்தம் காரணமாக அரச வைத்தியசாலைகளில் கதிரியக்கப் பரிசோதனைகள், சீடி ஸ்கான், எம்.ஆர்.ஐ ஸ்கான், மெமோகிராம் மற்றும் அஞ்சியோகிராம் பரிசோதனைகள் உள்ளிட்ட சேவைகளில் பாதிப்பு ஏற்படும். அறுவை சிகிச்சை கூடங்களில் கதிரியக்கத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளுக்கும் பாதிப்பு ஏற்படும்.

பொதுமக்களின் நலன் கருதி புற்றுநோய் மருத்துவமனைகள், மகப்பேறு மற்றும் சிறுவர் மருத்துவமனைகள், மற்றும் தேசிய மனநல நிறுவனம் ஆகியவற்றில் சேவைகள் வழமை போல் தொடரும். அனைத்து மருத்துவமனைகளிலும் அவசர மற்றும் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கான சிகிச்சைகள் தடையின்றி வழங்கப்படும். சுகாதார அமைச்சு உடனடித் தீர்வொன்றை வழங்கினால் மாத்திரமே இந்தப் போராட்டத்தைக் கைவிட முடியும்.-என்றார். (அ)

## ஜனநாயக...

மற்றும் கட்சியின் செயலாளர் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (அ-05)

## குளவி..

பாடசாலை நிறைவடைந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் பழைய கொலணிப் பகுதியில் குளவிக்கூடு ஒன்று கலைந்து அதிலிருந்த குளவிகள் வீதியால் சென்றோரை தாக்கிய சமயம் அவ் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் 5 மாணவர்களையும் குளவிகள் கொட்டியுள்ளன.

குளவிகள் கொட்டியதில் பாதிப்படைந்தோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அதில் கடுமையான தாக்குதலுக்குள்ளாகியிருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குளவிக் தாக்குதலுக்குள்ளான 5 பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# டித்வா பாதிப்பிலிருந்து மக்களை மீட்க அநுர அரசு போதியளவு நிதி ஒதுக்கீடு!

## முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜன. 28

டித்வா புயல் இடர்பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்டு, பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கியுள்ளதுடன், அப்பணிகளை மிகச் சிறப்பாகக் கையாண்டு வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2026ஆம் ஆண்டுக்கான முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இணைத்தலைவராக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2026ஆம் ஆண்டு வடக்கை பொறுத்தவரையில் ஒரு "அபிவிருத்தி ஆண்டாக" அமையவுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில் இவ்வாண்டு அதிகளவான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மாகாண சபையின் வழமையான நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, மத்திய நிரல் அமைச்சுக்கள் ஊடாகவும் எமக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறவுள்ளன. ஒதுக்கப்பட்ட நிதிகளை விட, மேலதிகத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் மேலும் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையுரையாற்றுகையில்- மத்திய மற்றும் மாகாண நிதிகளுக்கு மேலதிகமாக, இவ்வாண்டு விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாணத்தில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன- எனக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் வரவேற்புரையாற்றுகையில்- 2025 இறுதியில் ஏற்பட்ட டித்வா பேரிடர் நிவாரணப் பணிகளுக்குச் சிறப்பான அரசியல் தலைமைத்துவமும், அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைத்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் உரிய காலத்தில் வழங்கப்பட்டன. 2026இல் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், மாவட்டத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இக்கூட்டத்தில், வடக்கு மாகாண சபைக்கு 2026ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த நிதியில் 20 வீதம், அதாவது 1,592 மில்லியன் ரூபா முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, 2025ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், 2026ஆம் ஆண்டுக்கான புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதியும் பெறப்பட்டது. இக்கூட்டத்தில் வன்னித் தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று முன்னிலையாகாத ஷிரந்தி

கொழும்பு, ஜன. 28

தனிப்பட்ட காரணங்களினால் நேற்று பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப்பிரிவில் முன்னிலையாக முடியாது என ஷிரந்தி ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதற்கமைய, அங்கு முன்னிலையாவதற்காக அவர் இரண்டு வார கால அவகாசத்தைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியாரான ஷிரந்தி ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்றுக் காலை பொலிஸ் நிதிச் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் "சிரிலிய" எனும் பெயரில் முன்னெடுக்கப்பட்ட கணக்கின் நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளுக்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாக பொலிஸ் நிதிக்குற்றப்புலனாய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

## ரயில் ஓட்டுநர் பயிற்சி நிலையம் இரத்மலானையில் திறந்துவைப்பு

கொழும்பு, ஜன. 28

இரத்மலானையில் அமைந்துள்ள இலங்கை-ஜேர்மன் ரயில்வே தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் அதிநவீன சிமுலேட்டர் தொழில்நுட்பத்துடனான ரயில் ஓட்டுநர் பயிற்சி நிலையம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுவியுடன், இலங்கையில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த "ரயில் சிமுலேட்டர்" பயிற்சி நிலையத்தில், ஒரு பிரதான சிமுலேட்டர் அறையுடன், 8 பயிற்சி மேசைகள் மற்றும் 6 கண்காணிப்பு மேசைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த வசதியின் மூலம், மோசமான வானிலை மற்றும் அவசர கால சவால்களை கையாள்வது தொடர்பிலும், ஓட்டுநர்கள் பயிற்சி பெற முடியும்.

பயணிகளுக்கோ அல்லது ரயில்வே சொத்துக்களுக்கோ எந்தவித பாதிப்பும் இன்றி, சர்வதேச தரத்திலான பயிற்சியை குறுகிய காலத்தில் வழங்க இது வழிவகுக்கிறது.

பிரதி தலைமை பொறியியலாளர் டபிள்யு.ஜி.கே.எம் வதுகல மேற்பார்வையில் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சி, இலங்கை ரயில் சேவையை நவீனமயமாக்கி,

பொதுமக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான சேவையை வழங்குவதை உறுதி செய்கிறது. (அ)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 28

நாட்டில் கடந்த 2025 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2026 ஜனவரியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி மாதத்தின் குறித்த காலப்பகுதியில் சுமார் 4,970 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்ததாகவும், இந்த வருடம் இதே காலப்பகுதியில் 6,521 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் செயல் பணிப்பாளர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி 1,627 நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். அதனைத் தொடர்ந்து கம்பஹா மாவட்டத்தில் 971 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகள்!

மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பு - கிரான்குளத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆரோக்கியமாகப் பெற்றெடுத்த அரிய சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

குழந்தைகளும் தாயும் நலமுடன் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## ஜனவரி முதல் 25 நாட்களில் 1,375 வீதி விபத்துகள் பதிவு!

கொழும்பு, ஜன. 28

2026 ஆம் ஆண்டின் முதல் 25 நாட்களில் இலங்கையில் 1,375 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன.

இதில் 147 விபத்துக்கள் 155 நபர்களின் உயிரைப் பறித்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இது நாட்டில் வீதிப் பாதுகாப்பு குறித்த தொடர்ச்சியான கவலைகளை எடுத்துக் காட்டுகிறது.

குறிப்பாக உச்சக்கட்ட பயணக் காலங்கள் மற்றும் விடுமுறைக் காலங்களின்போது, இலங்கையின் வீதிகளில் தொடர்ந்து ஏற்படும் ஆபத்துகளை இந்த புள்ளிவிவரங்கள் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே.சேனாதீர தெரிவித்தார். (அ)

## இலஞ்ச குற்றச்சாட்டுகளில் கடந்த ஆண்டு 84 பேர் கைது!

கொழும்பு, ஜன. 28

2025 ஆம் ஆண்டில், இலஞ்சம் பெற்றதற்காக மொத்தம் 84 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி 1 முதல் டிசெம்பர் 31, வரை நாடு முழுவதும் நடத்தப்பட்ட 130 சோதனைகளின்போது இந்தக் கைதுகள் நடந்ததாக ஆணையகம் கூறியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 30 பேர் பொலிஸ் அதிகாரிகள் ஆவர்.

மேலும், நீதி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் பணியாற்றிய 11 நபர்கள், விவசாயம் மற்றும் பொது சேவைகள் துறையைச் சேர்ந்த ஐந்து அதிகாரிகள், கிராம

அலுவலர்கள் மூன்று பேர் மற்றும் பிரதேச சபைகளைச் சேர்ந்த மூன்று பேர் கடந்த ஆண்டு இலஞ்ச குற்றச்சாட்டுகள் தொடர்பாக கைது செய்யப்பட்டனர்.

2025 ஆம் ஆண்டில், ஆணையகம் 153 நபர்களுக்கு எதிராக 115 வழக்குகளைப் பதிவு செய்து 69 வழக்குகளை முடித்து வைத்தது.

2025 ஜனவரி 1 முதல் டிசெம்பர் 31, வரை 8,409 முறைப்பாடுகளை பெற்றதாகவும், அவற்றில் 569 முறைப்பாடுகள் மீது விசாரணைகள் தொடங்கப்பட்டதாகவும் ஆணையகம் வெளிப்படுத்தியது. (அ)

## 6 ஆம் தர கல்வி சீர்திருத்தங்கள் முன்னோடித் திட்டம் விரைவில்!

கொழும்பு, ஜன. 28

ஆறாம் தரத்திற்கான கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான முன்னோடித் திட்டமொன்றை நடப்பு 2026 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டங்கள் குறித்து கருத்து தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ, ஆரம்பகட்ட அமுலாக்கத்தின்போது ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த முன்னோடி முயற்சி பரிசீலிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இதற்கான கால அவகாசம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றபோதிலும்,

இவ்வருடத்திற்குள் அதனைத் தொடங்குவதே அமைச்சின் நோக்கமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான கருத்துக் கோவையை வரும் நாட்களில் பொதுமக்களின் கலந்துரையாடலுக்காகத் திறக்க அமைச்சு ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

இந்தச் சீர்திருத்தங்களில் தேவையான மாற்றங்களைச் செய்யும்போது பொதுமக்களின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும் என செயலாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.